**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.356/2018 வா.சா.1 கண்ணம்மாள்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 16.04.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் எனது விவசாய பூமியில் எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என பரிகாரம் கோரியுள்ளேன். குறிப்பாக வேறு பரிகாரம் ஏதும் கோரியுள்ளேனா என்றால் தெரியவில்லை. வழக்கு சொத்து புல எண் மற்றும் வகைபாடு தெரியுமா என்றால் தெரியும் புல எண் 18 ஆகும். வகைபாடு பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து நத்தம் பூமி என்றால் சரிதான். அதில் நான் தென்னை மரம் பயிர் இட்டு உள்ளேன்.

2) நத்தம் என்பது குடியிருப்பு பகுதிக்காக விடப்பட்ட இடம் என்றால் சரியல்ல. நான் அங்கு விவசாயம் தான் செய்கிறேன். வழக்கு சொத்து என் அனுபவத்தில் இருப்பதாக எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 9 ஆண்டுகளுக்கு முன்பு தெரியும்.

3) வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள சொத்து தொடர்பாக நான் பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்து இருந்தேன் என்றால் சரிதான். அந்த அருகில் உள்ள பூமியை நான் அவ்வழக்கு வாயிலாக நீதிமன்றம் மூலம் தான் சுவாதீனம் எடுத்தேன் என்றால் சரிதான். நான் அதனை எப்போது சுவாதீனம் எடுத்தேன் என்றால் தற்போதில் இருந்து 9 ஆண்டுகளுக்கு முன்பு சுவாதீனம் எடுத்தேன். மேற்படி அருகில் உள்ள பூமியை சுவாதீனம் எடுக்கும் போது தான் வழக்குசொத்தும் என் சுவாதீனத்திற்கு வந்தது என்றால் சரியல்ல. அது முதலில் இருந்து என் சுவாதீனத்தில் இருந்தது. வழக்கு சொத்து தனி காலை என்பதும் அதனை நாங்கள் அனுபவித்து வந்தோம் என்பதும் மேற்படி அருகில் உள்ள பூமியை சுவாதீனம் எடுத்த போது

தான் தெரிய வந்தது என என் வழக்குரை 4ம் பத்தியில் குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தை என்னுடைய சொத்து என நினைத்து தெரியாமல் அனுபவித்து வந்தேன். வழக்கு சொத்து அரசு நிலம் என 2018 ல் தான் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான்.

4) நான் நீதிமன்றம் மூலம் அருகில் உள்ள பூமியை சுவாதீனம் எடுத்த போது தான் வழக்கு சொத்தை ஆக்கிரமித்து கொண்டேன் என்றால் சரியல்ல. நாங்கள் பூமி வாங்கிய போதியதில் இருந்து வழக்கு சொத்து என் வசம் தான் உள்ளது. என் முன்னோர்கள் காலத்தில் இருந்து அது எங்களிடம் உள்ளது. வழக்கு சொத்து அரசு நிலம் என தெரிந்து அதனை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்து இல்லை என்றால் சரிதான்.

5) தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு தடுப்பு சட்டம் 1905 படி எனக்கு வா.சா.ஆ. 9 அறிவிப்பு எனக்கு வழங்கப்பட்டது என்றால் நான் அதனை கையில் பெறவில்லை. ஆனால் அதனை வழக்கு சொத்தில் ஒட்டி இருந்தார்கள். வழக்கு சொத்து அரசு நிலம் என்பதால் வா.சா.ஆ. 9 அறிவிப்பு சட்டப்படியானது மற்றும் செல்லத்தக்கது ஆகும் என்றால் சரியல்ல. மேற்படி அறிவிப்பு முறையான சட்ட விதிமுறைகளை பின்பற்றி தான் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல.

**(1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம் /-(மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி